DEPOSITION OF WITNESS
IN THE COURT OF IADDITIONAL DISTRICT MUNSIF AT PUDUCHERRY
OS.No.2254 /2017
Deposition of DW1 Cross examination

Name : Thirumal S/o. Manikandan

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 21.07.2025.

**குறுக்கு விசாரணை**:

1. முதல் விசாரணை வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் எனது வழக்கறிஞர் படித்து காண்பித்தார், எனக்கு எழுத படிக்கத் தெரியாது. வாதி ரீசர்வே எண் 67N/16 என்கின்ற சொத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் FMB யை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வரைபடம்தான் வழக்கு சொத்தின் FMB என்றால் சரிதான். அந்த ஆவணம் **வா.த.சா.ஆ 13** ஆக குறியிடப்படுகிறது.

2. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ 13 FMB ஆவணத்தில் வழக்கு சொத்திற்கு தெற்கில் ரீசர்வே எண் 67N/14 இல் எனது தாயார் கோவிந்தம்மாள் சொத்து உள்ளது என்றால் சரிதான். அதேபோல் ரீசர்வே எண் 67N/15 இல் உள்ள இடம் பொதுப்பாதையாக FMB இல் உள்ளது என்றால் இல்லை, அது பொறம்போக்கு சந்தாகும்.அதேபோல் என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ 13 ஆவணத்தில் வழக்கு சொத்திற்கு ரீசர்வே எண் 67N/15 இடத்திற்கும் கிழக்கில் ரீசர்வே எண் 67N/17 வடிவேலு மற்றும் சீனிவாசன் ஆகியோருக்கு

சொந்தமான இடம் என்றால் சரிதான். அதேபோல் வழக்கு சொத்திற்கு வடக்கில் 67N/18 இடம் சுப்புரமணியன் என்பவருக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். ரீசர்வே எண் 67N/17 உள்ள இடத்திற்கு சொந்தகாரரான வடிவேலு மற்றும் சீனிவாசன் ஆகியோரின் தந்தை பெயர் நாராயணசாமி கவுண்டரா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அதேபோல் ரீசர்வே எண் 67N/18 இல் உள்ள சுப்புரமணியன் என்பவரின் தந்தை பெயர் குப்புசாமியா என்றால் சரிதான். மேற்கூரிய ரீசர்வே எண் 67N/17 மற்றும் ரீசர்வே எண் 67N/18 இல் உள்ள வடிவேலு, சீனிவாசன் மற்றும் சுப்புரமணியன் ஆகியோர் சேர்ந்து ரீசர்வே எண் 67N/16 இல் உள்ள இடத்தை 29.08.1988 அன்று கிரயம் பெற்றார்கள் என்றால் சரிதான்.

3. மேற்கூறிய வடிவேலு, சீனிவாசன் மற்றும் சுப்புரமணியன் ஒத்திசைந்து ரீசர்வே எண் 67N/16 சொத்தின் வடக்கில் உள்ள பகுதியை சுப்புரமணியன் மத்திய பகுதியை சீனிவாசன் தெற்கு பகுதியை வடிவேலுவும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். வடிவேலு, சீனிவாசன் மற்றும் சுப்புரமணியன் ரீசர்வே எண் 67N/16 சொத்தை பிரித்து அனுபவிக்க பாகப் பிரிவினை பத்திரம் ஏதும் எழுதிக் கொள்ளவில்லை என்றால் சரிதான், வாய்மொழியாகப் பிரித்து கொண்டார்கள். மேற்கூறிய வடிவேலு ரீசர்வே எண் 67N/16 சொத்தில் அவருக்கு உண்டான பகுதியை 10.12.2015 அன்று சுப்புரமணியன் என்பவருக்கு விடுதலைப் பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான்.

4. என்னிடம் காட்டப்படும் பி. வா.த.சா.ஆ 2 ஆவணத்தில் மொத்தம் 1290 சதுரடி இடத்தில் வடிவேலுக்கு சொந்தமான மூன்றில் ஒரு பாகம் என்றுதான்

உள்ளது என்றாலும் குறிப்பிட்டு எந்த திசையில் உள்ள பாகம் என குறிப்பிடவில்லை என்றாலும் எனக்கு எழுத படிக்கத் தெரியாததனால் எனக்கு சரிவர தெரியவில்லை, அதில் சக்குபந்தி போட்டு இருந்ததால் நான் கிரயம் பெற்றேன். எனக்கு அந்த ஆவணத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் தெரியும் என்றாலும் எழுத படிக்கத் தெரியாததனால் சரி வர தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் மறுக்கிறேன். பி.வா.த.சா.ஆ 2 ஆவணத்தில் மொத்த இடமான 1290 சதுரடிக்கு உண்டான சக்குபந்திதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மறுக்கிறேன்.

5. பி.வா.த.சா.ஆ 2 ஆவணம் வடிவேலு சுப்புரமணியனுக்கு விடுதலைப் பத்திரம் எழுதித் தந்த பின்னர், சுப்புரமணியனும் சீனிவாசனும் வாய்மொழி பரிவர்த்தனை மூலம் மத்திய பகுதியை சுப்புரமணியனும் சீனிவாசன் தெற்கு பகுதியை மாற்றிக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. பி.வா.த.சா.ஆ 2 மற்றும் வா.த.சா.ஆ 1 ஆவணங்கள் ஏற்படுத்தப்பட்ட போது நான் எனது தாயாருடன் ரீசர்வே எண் 67N/14 இடத்தில்தான் இருந்தேன் என்றால் சரிதான்.

6. சுப்புரமணியன் ரீசர்வே எண் 67N/18 இல் உள்ள இடத்தில் இருப்பதாலும் ரீசர்வே எண் 67N/16 இல் உள்ள வடக்கு பகுதி அவரிடம் உள்ளதாலும் ரீசர்வே எண் 67N/16 இல் உள்ள மத்திய பகுதியை அவருக்கு கொடுத்தால் மூன்று இடத்தை சேர்த்து ஒன்றாக அனுபவித்துக் கொள்ளலாம் என்ற காரணத்தில் தான் வாய்மொழி பரிவர்த்தனை செய்தார்கள் என்றால் மறுக்கிறேன். சுப்புரமணியன் சீனிவாசன் மற்றும் வடிவேலு ஆகியோர் வாய்மொழியாக செய்த பாகப்பிரிவினை மற்றும் பரிவர்த்தனை குறித்து ரீசர்வே எண் 67N/14 எனது தாயாருடன் அருகிலே நான் இருந்ததால்

அனைத்து சங்கதிகளும் எனக்கு தெரியும் என்று சொன்னால் மறுக்கிறேன், வாய்மொழியாக செய்திருக்க வாய்பில்லை.

7. என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ 4 ஆவணம் மூலம் ரீசர்வே எண் 67N/16 இல் உள்ள இடத்தில் சீனிவாசனுக்கு வாய்மொழி பரிவர்த்தனை மூலம் பெற்ற தெற்கு பகுதியை அவரது மகனான வாதி சிவபாலனுக்கு 05.10.2017 அன்று செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்று சொன்னால் தெரியும், தவறுதலாக சக்குபந்தி மாற்றி எழுதப்பட்டதாக தெரிந்துக்கொண்டேன். சக்குபந்தி தவறுதலாக எழுதப்பட்டதாக நான் தெரிந்துக் கொண்டு எத்தனை வருடம் ஆகிறது என்றால் சுமார் 7 வருடங்கள் இருக்கும். வா.த.சா.ஆ 4 ஆவணம் எழுதப்பட்ட போது ரீசர்வே எண் 67N/16 இல் உள்ள சொத்து குறித்து எனது பெயரில் எவ்வித ஆவணமும் இல்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ 4 ஆவணம் எழுதப்பட்ட போது ரீசர்வே எண் 67N/14 இல் உள்ள சொத்து குறித்து எனது பெயரில் தற்போது வரை எவ்வித ஆவணமும் இல்லை என்றால் சரிதான், எனது தாயார் கோவிந்தம்மாள் பெயரில் தான் உள்ளது. எனது அக்கா பெயர் குப்பு என்றால் சரிதான். மேற்கூறிய குப்பு ரீசர்வே எண் 67N/18 இல் உள்ள சுப்புரமணியனின் மனைவி என்றால் சரிதான். சுப்புரமணியன் எனது மாமா ஆவார்.

8. என்னிடம் காட்டப்படும் வா.தா.சா. 4 ஆவணம் மூலம் சீனிவாசன் அவரது மகனான சிவபாலனுக்கு செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்து ஒரு மாதம் கழித்து பி.வா.த.சா.ஆ 3 ஆவணம் மூலம் ரீசர்வே எண் 67N/16 மூன்றில் ஒரு பகுதியை எனக்கு கிரயம் கொடுத்தார் என்றால் சரிதான். நான் கிரயம் பெற்ற பி.வா.த.சா.ஆ 3 கிரய ஆவணத்தில் ரீசர்வே எண் 67N/16

மூன்றில் ஒரு பங்கு என்றுதான் உள்ளது என்றாலும் எந்த திசையில் உள்ள பங்கு என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் மறுக்கிறேன். எனது கிரைய ஆவணமாகிய பி.வா.த.சா.ஆ 3 இல் எந்த திசையில் உள்ள பங்கு என்று குறிப்பிடப்படவில்லை என்று எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. வா.த.சா.ஆ 4 ஆவணத்தில் சக்குபந்தியில் தெற்கு பகுதியில் பிரதிவாதியின் பெயர் தவறுதலாக குறிப்பிட்டதை பயன்படுத்தி பி.வா.த.சா.ஆ 3 ஆவணத்தில் சக்குபந்தியில் சிவபாலன் மனைக்கு தெற்கு என்று சக்குபந்தி காண்பித்து வாதிக்கு சொந்தமான சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் மறுக்கிறேன்.

9. 15.10.2017 அன்று வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து வீடு கட்ட முயற்சித்தீர்கள் என்று சொன்னால் சுப்புரமணியிடம் முன்பணம் கொடுத்து 15.10.2017 தேதிக்கு ஒரு மாதம் முன்னரே கட்டுமானம் செய்ய தொடங்கிவிட்டோம். 15.10.2017 தேதியன்று வழக்கு சொத்து குறித்து என் பெயரில் எவ்வித ஆவணமும் இல்லாத போது அத்துமீறி கட்டுமானம் கட்டி உள்ளேன் என்று சொன்னால் முன்பணம் கொடுத்ததால் கட்டினேன். நான் முன்பணம் கொடுத்த சங்கதி குறித்து எனது எதிர்வாதுரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

10. நான் சுப்புரமணியிடம் முன்பணம் கொடுத்ததற்கு எவ்வித ஆதார ஆவணமும் இல்லை என்றால் சரிதான். 15.10.2017 அன்று நான் அத்துமீறி வழக்கு சொத்தில் கட்டுமானம் கட்டியதால் வாதி வில்லியனூர் காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தார் என்றால் இல்லை, வாதியின் தந்தை கொடுத்தார். வில்லியனூர் காவல் நிலையத்தில் என்னை அழைத்து இது

சம்பந்தமாக விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். விசாரணையின் போது காவல் நிலையத்தில் எவ்வித உரிமை ஆவணம் இன்றி கட்டுமானம் வழக்கு சொத்தில் செய்யக்கூடாது என்று எச்சரித்து ஆவணங்கள் எடுத்து வர சொல்லி அனுப்பினார்களா என்றால் எச்சரிக்க வில்லை, ஆனால் என்னிடம் ஆவணம் எடுத்துவருமாறு கூறினார்கள். பின்னர் சுப்புரமணியன் காவல் நிலையம் வந்து என்னுடைய இடத்தில் தான் பிரதிவாதி கட்டுமானம் செய்கிறார் என்று கூறிய பின்னர் நான் கட்டுமானம் செய்தேன். நான் கூறியது போல் சுப்புரமணியன் காவல் நிலையம் வரவில்லை என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

11. 15.10.2017 அன்று வாதி அளித்தப் புகாரின் பேரில் என்னை எச்சரித்தும் மீண்டும் நான் கட்டுமானம் செய்ததால் வாதி மீண்டும் 17.10.2017 அன்று மற்றொரு புகார் அளித்தார் என்றால் மறுக்கிறேன். 19.10.2017 அன்று மாவட்ட ஆட்சியரிடம் வாதி எனது நிலத்தை நான் அத்துமீறி அபகரிக்கிறேன் என்று புகார் கொடுத்தாரா என்றால் கொடுத்தார், நான் ஆவணங்களோடு விசாரணைக்கு சென்றேன். வாதி என்மீது காவல் நிலையத்திலும் மாவட்ட ஆட்சியரிடமும் புகார் கொடுத்தால் தான் எனது மாமா சுப்புரமணியுடன் இணைந்து சதி செய்து தவறான சக்குபந்தி போட்டு 02.11.2017 அன்று கிரய ஆவணம் ஏற்படுத்தினோம் என்று சொன்னால் சரியல்ல.

12. நீதிமன்றத்தின் மூலம் Advocate Commissioner Surveyor உடன் வந்து வழக்கு சொத்தை ஆய்வு செய்தார்களா என்றால் செய்தார்கள். வழக்கு B அட்டவனண சொத்து வாதிக்கு தான் சொந்தம் என்றாலும் அதில் அத்துமீறி பிரவேசிக்க கட்டுமானம் செய்யவும் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை

என்றாலும் நான் இதுவரை செய்த கட்டுமானத்தை இடித்து B அட்டவனை சொத்தை வாதியிடம் ஒப்படைக்க வேண்டும் என்றாலும் மறுக்கிறேன்.